**சுருக்கம்**

நிர்வாகம் – இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை – தற்காலிக பணியிடங்கள் – கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோட்டார் அரசினர் ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு ஒரு செவிலியர் – பணியிடம் நிரப்பப்பட்டது இப்பணியிடத்திற்கு நிரப்பப்பட்ட நாளான 07.06.2013 முதல் புத்தாக்கம் மற்றும் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் ( இம–2 (1) துறை**

அரசாணை (ப) எண்.281

நாள்:14.03.2014
விஜய, மாசி 30
**திருவள்ளுவர் ஆண்டு 2045**

**படிக்கப்பட்டது:-**

1) அரசாணை (நிலை) எண் 10, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (இம1–2) துறை, நாள் 23.01.2006
2) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையரின் கடித எண் 7896/நி2/3/2013, நாள் 07.08.2013

---

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோட்டார், அரசினர் ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு தோற்றுவிக்கப்பட்ட ஒரு செவிலியர் பணியிடத்திற்கு அப்பணியிடம் நிரப்பப்பட்ட நாளான 07.06.2013 முதல் புத்தாக்கம் மற்றும் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்குமாறு இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடித்தத்தில் அரசினைக் கோரியுள்ளார்.

2) இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்தப்பின் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கோட்டார் அரசினர் ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ஒரு செவிலியர் பணியிடத்திற்கு அப்பணியிடம் நிரப்பப்பட்ட நாளான 07.06.2013 முதல் புத்தாக்கம் மற்றும் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பும் வழங்கலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் அரசின் புத்தாக்க

ஆணையை எதிர்நோக்கி இப்பணியிடத்தை நிரப்பிய இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையரின் செய்கைக்கு பின்னேற்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

3) இவ்வரசானை நிதித்துறையின் அ.சா.கு.எண்.10552/சுகாதரரம்–I/14, நாள்10.03.2014-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**

ஆணையர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை–106.
முதல்வர், அரசினர் ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.
மாநில கணக்காயர் (துணிக்கை–1), சென்னை–18.
மாநில தலைமைக் கணக்காயர் (கணக்கு (மற்றும்) வருவாய்), சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்,
நிதித் (சுகாதாரம்–1) துறை, சென்னை–9.
இ.கோ / உதிரி

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

19.3.14
**பிரிவு அலுவலர்**

## இணைப்பு

**அரசாணை (ப) எண்.281, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் ( இம–2 (1) துறை, நாள்:14.03.2014**

| வ. எண். | பணியிடங்கள் மற்றும் மருத்துவ நிலையத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள விகிதம் | பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை மற்றும் நாள் | காலிப் பணியிடம் உருவான நாள் | காலிப் பணியிடம் நிரப்பப்பட்ட நாள் | கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | செவிலியர், அரசினர் ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி . | 1 | ரூ. 9300–34800- தர ஊதியம் ரூ. 4450 | அரசாணை (நிலை) எண்.10, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (இம1–2) துறை, நாள் 23.01.2006 | பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் | 07.06.2013 | 2210–மருத்துவமும் பொது சுகாதாரமும் – 05 மருத்துவக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி 101 – ஆயுர்வேதா – I திட்டத்தில் சேராதது AA – கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், அரசினர் ஆயுர்வேதா மருத்துவக் கர்லூரி மற்றும் மருத்துவமனை அமைத்தல்– 01 சம்பளங்கள் (த.தொ.கு:2210–05–101–AA–0101) |

**ஜெ.ராதாகிருஷ்ணன்**
**அரசு செயலாளர்**

**/உண்மை நகல்/**

ஜெ. அ... 19.3.14

**பிரிவு அலுவலர்**